

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட, காயல்பட்டினம் நகராட்சி அருணாசலபுரம் தேசிய நடுநிலைப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 34 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், திருச்செந்தூர் நகராட்சிக்கு உட்பட்ட, சுப்பிரமணியபுரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 15 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், வேப்பங்காடு டாக்டர் சிவந்தி ஆதித்தனார் தொடக்கப் பள்ளியில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 34 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடம், உடன்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட கொட்டங்காட்டில் சமூக பொறுப்பு நிதியில் இருந்து ரூபாய் 37 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி. உடன், மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளருமான அனிதா ஆர். இராதா கிருஷ்ணன், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, உடன்குடி ஒன்றியச் செயலாளர்கள் டி.பி.பாலசிங், பரமங்குறிச்சி இளங்கோ, பேரூர்க் கழகச் செயலாளர் மா.மால்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் அஜய் சீனிவாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை ஆத்திகுளம் காந்திபுரம் பகுதியில் மழைநீர் வடிந்த பிறகு மேற்கொள்ளப்பட்டு வரும் சுகாதாரப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, மாநகராட்சி ஆணையர் தினேஷ்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், கிழக்கு மண்டல தலைவர் வாசுகி சசிக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், கழகத்தினர் உடன் உள்ளனர்.

### நெல்லை மத்திய மாவட்ட

# செயற்குழுக் கூட்டம் - தொகுதிப் பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அறிவிப்பு !

நெல்லை, அக்.29-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் அறிமுகக் கூட்டம் இன்று (29.10.2024 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில் மத்திய மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கலைஞர் கூட்ட அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வி.கே. முருகன் தலைமையில் நடைபெற உள்ளது.



என நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் மத்திய மாவட்டக் கழக மாவட்ட அவைத்தலைவர் வி.கே. முருகன் தலைமையில் இன்று (29 ம் தேதி) நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே இந்நாள்,முன்னாள் சட்டமன்ற,நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட, கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் சம்பந்தமாக. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணியில் முழுமையாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, அக்.29-

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025 தகுதி யேற்படுத்தும் நாளாகக் தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஓசூர், வேப்பனப்பள்ளி, தளி சட்டமன்ற தொகுதிகளில் 29.10.2024 முதல் 28.11.2024 வரை வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனு செய்ய காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிப்பின்படி 09.11.2024, 10.11.2024 23.11.2024 24.11.2024 நிர்ணயிக்கப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 09.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்தோ அல்லது கழகத்தினரோ வாக்காளர் பட்டியலில் உள்ள வாக்களர். களின் விவரங்களை சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01-01-2025 அன்று 18 வயது நிரம்ப கூடிய புதிய வாக்காளர்களும் அவர்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்ள அதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 01-01-2025-ஆம் தேதி 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் மற்றும் இறந்த. வர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6-ம், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7-ஆம் வாக்காளர் விவரங்கள் உள்ள தவறுகளை திருத்தம் செய்ய ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம் முகவரி மாற்றம் நகல் வாக்காளர் அட்டை பெற படிவம் 8-ஆம் அயல் நாடு வாழ் வாக்காளர் சேர்க்க படிவம் 6A, ஆதார் எண், வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6B விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.



இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக்கொள்ள வேண்டிய விண்ணப்பப் படிவமான படிவம் 6 முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம் 6 ன் காலம் IV மனுதாரரது முந்தைய முகவரி தவறாது எழுதிட வேண்டும். வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024. பெயர்களைச் சேர்க்கநீக்க! திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை சிறப்பு முகாம் நடை பெறும் நாட்கள் நவம்பர் 16-17 தேதிகள் மற்றும் நவம்பர் 23 -24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடும் நாள் 06.01.2025. மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழ உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வார்டு, வட்ட, கிளை கழக செயலாளர்கள், கவுன்சிலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி இந்த பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மேலும் இந்த பணியின் விவரங்களை அவ்வப்போது மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தின் சார்பாக நிய மிக்கப்பட்டுள்ள (BLA2) மற்றும் பூத்கமிட்டி உறுப்பினர்கள் (BLC) ஆகியோர் இந்தப் பணியினை முழுமையாக ஈடுபட்டு 2026 சட்ட மன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள (BLO) க்களுடன் உடன் இருந்து கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.



வில்லிவாக்கம் மேற்கு பகுதி, முன்னாள் வட்ட கழக செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான மறைந்த மு.மோகன் அவர்களின் திருஉருவப்படத்தை பகுதி கழக செயலாளரும் மண்டல குழு தலைவருமான கூ.பீ.ஜெயின் முன்னிலையில், 95வது வட்ட கழக செயலாளர் மா. அகிலன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலைத்துறை மற்றும் பெருநகர வளர்ச்சி குழுவின் துறை அமைச்சருமான பி.கே. சேகர் பாபு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், ஜோசப்சாமு வேல் தலைமை செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன், கிழக்கு பகுதி செயலாளர்கள் வே.வாசு , ஐசிஎப் வ.முரளிதரன் மற்றும் வானவில் விஜய், சாவித்திரி வீரராகவன், சுதாதீன தயாளன் , ஜெ.பாலமுருகன், ஜி.ஜெ.பிரபு, ஜி.கே.வெங்கட் மற்றும் பலர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

### தேர்தல் வியூகங்களை வகுப்பதில்

# முத்தமிழறிஞர் கலைஞருக்கு இணையாகச் செயல்படுகிறார் முதல்வர்!

## காரைக்குடியில் - அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக். 29-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி சட்டமன்றத் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் காரைக்குடியில் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ. மாநில விவசாய அணி இணைச் செயலாளர் முருகவேல் கலந்துகொண்டு தேர்தல் பணி குறித்து சிறப்புரையாற்றினார். தேவகோட்டை நகர் கழகச் செயலாளர் பெரி.பாலா மாநகரச் செயலாளர் என்.குணசேகரன் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்கள் .

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

தமிழகத்தில் 2026 தேர்தலில்200 தொகுதிகளை கைப்பற்ற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதற்கேற்ப சட்டமன்ற தொகுதிகளுக்கு பொறுப்பாளர். கள் நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.

நாம் தேர்தல் பணிகளை இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே துவங்கி விட்டோம். கழக தலைவராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் உள்ளாட்சி தேர்தல், பாராளுமன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தல் ஆகியவற்றில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம். அவர் வெற்றியின் தொடர் கதாநாயகனாக உள்ளார்.

தேர்தலில் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தேர்தல் வீயூகங்கள் வகுப்பதில் முதல்வர் தளபதி அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அவருக்கு இணையாக தமிழகத்தில் தேர்தல் வீயூகங்கள் வகுப்பதில் அரசியல் தலைவர் யாரும் இல்லை. தலைவர் கலைஞர் தேர்தல் வியூகத்தினை அமைத்து வெற்றி பெறுவதற்கான வழியை திட்டமிட்டு பணியாற்றி வெற்றி பெறுவார். அவரது வழியில் முதல்வர் தளபதி அவர்கள் தேர்தல் வியூகங்களை வகுத்து வெற்றி ஒன்றே இலக்காக கருதி நமக்கு அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார். அவரது வேண்டுகோளை ஏற்று நமது மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வெற்றியை பெற வேண்டும். எத்தனை கட்சிகள் வந்தாலும் பரவாயில்லை.

75 ஆண்டுகளாக மக்களுக்கு தொடர்ந்து பாடுபட்டு பணிகள் செய்து வரும் இயக்கம் கழகமாகும். நமது கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நமது கொள்கைகளை மக்கள் ஏற்றுக்கொண்டு நம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள். கழகத் தலைவர் தளபதி அவர்களின் மூன்றரை ஆண்டு ஆட்சியின் சாதனைகளை வீடு வீடாக எடுத்துக்கூறி வாக்கு சேகரிக்கவேண்டும். எனவே அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றி வெற்றிக்கனியை பறித்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே. ஆர். பெரிய கருப்பன் பேசினார்.

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏ. சுப. துரைராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மேயர் எஸ்.முத்துதுரை சாக்கோட்டை கிழக்கு ஒன்றியச் செயலாளர் சுப.சின்னத் துரை ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். தேவகோட்டை நகர் கழகச் செயலாளர் பெரி.பாலா நன்றி கூறினார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகப் பொருளாளர், மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிவுறுத்தலின்படி, மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதல்படி, வளசரவாக்கம், 11 வது மண்டல், 147 வது வார்டுக்கு உட்பட்ட கங்கா நகர் அரசு உயர்நிலைப் பள்ளியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், எம்.ஜி.ஆர். பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி துவக்கி வைத்தார். 11–வது மண்டலக் குழுத் தலைவர், பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் மேனாள் கவுன்சிலர், 147–வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் லயன் எஸ்.ஜி.மாதவன் ஏற்பாட்டில் 147–வது வார்டு மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் தலைமையில் நடைபெற்றது.

# மானாமதுரை தொகுதியில் கழகத்தினருக்கு நலத்திட்ட உதவிகள்!

## திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சிவகங்கை, அக். 29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் தீப ஒளி திருநாளை முன்னிட்டு தொகுதியில் உள்ள திருப்பு வனம், மானாமதுரை, இளை யான்குடி, பேரூராட்சி ஒன்றியத்தின் கிளைக் கழக நிர்வாகிகளுக்கு தீப ஒளி திருநாளை முன்னிட்டு இனிப்பு பட்டாசு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், பேரூராட்சி மன்ற தலைவர் பி.ஏ.நஜூமுதீன், பேருர்கழக செயலாளர் நாகூர் கனி, மானாமதுரை நகர்கழக செயலாளர் க. பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் வே. தமிழ் மாறன் ஆறு.செல்வராசன், கா. வெங்கட்ராமன், துரை. ராஜாமணி. எம். அண்ணாதுரை, கடம்பசாமி திருமதி வசந்தி சேந்கை மாறன்,கூட்டுறவுசங்க தலைவர் சுப.தமிழரசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க. சுப்பு
## அக்டோபர் 29 (2011)



**கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.**

**சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.**

**கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.**

**“பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**